## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| OS.No. 227/2014 | Date : 01.11.2025 | DW 1 |
|---|---|---|
| Name: காஞ்சனா | த/பெ. குமரேசன் | |

**8ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை (6 மற்றும் 7 பிரதிவாதிகள் 8ம் பிரதிவாதியின் குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்கள்)**

6ம் பிரதிவாதியின் கணவர் பெயர் ஜோதிலிங்கம் என்றால் சரிதான். 6ம் பிரதிவாதிக்கும் ஜோதிலிங்கத்திற்கும் பிறந்த மகள் தான் 7ம் பிரதிவாதி சூர்யஜோதி என்றால் சரியல்ல. ஜோதிலிங்கத்தின் மகள் 7ம் பிரதிவாதி என்றால் சரியல்ல அவர் வளர்ப்பு மகள் ஆவார். 6ம் பிரதிவாதியான சம்பூர்ணத்தின் கணவர் ஜோதிலிங்கம் 8ம் பிரதிவாதி ராமநாத பிள்ளை இரண்டு பேரும் உடன்பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான். ஜோதிலிங்கம், ராமநாத பிள்ளை ஆகியோர் குட்டப்பட்டி கிராமம் சர்வே எண். 240/1A இதில் ஒரு ஏக்கர் நிலம் தனிப்பட்டாவாக உள்ளது அந்த பட்டா எண் 1170 என்றால் சரியல்ல. சர்வே எண். 240/1C மற்றும் 235/1C இவையும் அவர்கள் பெயரில் கூட்டு பட்டாவாக பட்டா எண். 1641யில் உள்ளது என்றால் சரியல்ல. மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் WP 29419 /2019 யில் 12.11.2024யில் உத்தரவு பிறப்பித்தார்கள் என்றும் மேற்படி உத்தரவின்பேரில் 6ம் பிரதிவாதி ரெவியூ மனு எண். 61/2025 தாக்கல் செய்து அது நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல. ஏற்கனவே 6, 7 மற்றும் 8ம் பிரதிவாதிகள் பிரிந்த சொத்தில் தனிப்பட்ட சட்டபடியான தனி சுவாதீனத்தில் இருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் முதல் அயிட்டம் குட்டப்பட்டி கிராமம் சர்வே எண். 240/1A ஒரு ஏக்கர் நிலமானது 6ம் பிரதிவாதியின் கணவர் ஜோதிலிங்கத்திற்கும், அவரது சகோதரர் ராமநாத பிள்ளைக்கும் பாகமாக ஒதுக்கப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. மேற்படி சொத்தில் 30 ஆண்டுகளுக்கு மேலாக தனிப்பட்ட சட்டப்படியான சுவாதீனத்தில் இருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. 6 மற்றும் 7 பிரதிவாதிகள் குடும்பத்திற்கு பாகப்பிரிவினை மூலம் ஒதுக்கப்பட்ட சொத்தான குட்டப்பட்டி கிராமம் சர்வே எண். 240/1A வினை அபகரிக்கும் தீய எண்ணத்துடன் பொய்யான சங்கதிகளை கொண்டு இந்த வழக்கை வாதிகளும் பிரதிவாதிகளும் வஞ்சகமாக ஒன்றுகூடி தாக்கல் செய்துள்ளதால் வாதியின் வழக்கானது தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. குட்டப்பட்டி கிராமம் சர்வே எண். 240/1C யில் 5 செண்ட் நிலத்தில் ஒரு கூட்டு கிணறு உள்ளது என்றும் அதில் 1/7 யில் நீர் இறைக்கும் கூட்டு பாத்தியம் உள்ளது என்றால் சரியல்ல. குட்டப்பட்டி கிராமம் சர்வே எண். 235/1 யில் உள்ள 28 செண்ட் நிலமும் அதில் உள்ள 5 அங்கன வீடு அதில் அமைந்துள்ள சேந்து கிணறு ஆகியவையும் மேற்படி 6 மற்றும் 7 பிரதிவாதிளுக்கு பாத்தியம் உள்ளது என்றால் சரியல்ல. சர்வே எண். 240/1D யில் உள்ள 5 அங்கன கையோடு போட்ட

வில்லைவீட்டிலும் மேற்படி 6 மற்றும் 7 பிரதிவாதிளுக்கு பாத்தியம் உள்ளது என்றால் சரியல்ல. இதில் இருந்த கிணற்றை எம்.எஸ்.குமரேசனும் மற்றும் அவரது மனைவியான சம்பூர்ணவள்ளியும் இடித்து மூடிவிட்டார்கள் என்றால் சரியல்ல. சர்வே எண். 240/1D யில் உள்ள 5 அங்கன வில்லைவீடுகளையும் இடித்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. உண்மை இவ்வாறிருக்க பொய்யான சங்கதிகளை புனைந்து இந்த பாகப்பிரிவினை வழக்கை வாதிகளும் பிரதிவாதிகளும் 6, 7 மற்றும் 8 பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்துள்ளதாகவும் மேற்படி வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

பி.வா.சா.ஆ.16 ஆவணமான நீதிப்பேராணை மனு வில் வாதிகளை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். நீதிப்பேராணை மனுவில் இந்த பாக வழக்கினை குறிப்பிட்டுதான் தாக்கல் செய்தோமா என்றால் குறிப்பிட்டுதான் தாக்கல் செய்தோம். நான் பொய்யாக சொல்கிறேன் என்றும் அசல் வழக்கு எண். 227/2014 என்ற வழக்கு குறித்து சொல்லவில்லை என்றாலும வருவாய் துறையினர்தான் நீதிமன்றத்தில் வழக்கு குறித்து சொல்லியுள்ளார்கள் என்றால் சரியல்ல. 6ம் பிரதிவாதி சம்பூர்ணமும் நான் தாக்கல் செய்த அதே காலகட்டத்தில் நீதிப்பேராண்மை மனு 12204/2019 என்ற மனு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி மனுவில் சேலம் மாவட்ட வருவாய் அலுவலர் இந்த தாவா வழக்கு நிலுவையில் உள்ளதால் மேற்படி தாவாவின் தீர்ப்பிற்கு பின்னரே இறுதி உத்தரவு பிறப்பிக்க இயலும் என உத்தரவு பிறப்பித்துள்ளார் என்றும் மேற்படி உத்தரவு வா.சா.ஆ.10 என்றால் சரிதான். தாவா வழக்கு நிலுவையில் இருககும் போது 1 முதல் 5 பிரதிவாதிகளான நானும், 6 முதல் 8 பிரதிவாதிகளும் சேர்ந்து மாறி மாறி நீதி பேராணை மனுக்கள் தாக்கல் செய்து தாவா சொத்துக்களை பாகம் பிரிக்க விடாமல் வாதிகளை அலைக்கழித்து வருகிறோம் என்றால் சரியல்ல. அதனால் வாதிகள் கோரியுள்ளவாறு செலவுத்தொகையுடன் தாவா தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/—காஞ்சனா

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/—ஆர்.சரவணபாபு,
சார்பு நீதிபதி,
மேட்டூர்.